DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 211/2024** |
| Deposition of Witness for | : PW 9 |
| Name | : திரு.ஜமால் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 02.07.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 2nd July 2026.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி வீடியோ கான்பரன்சிங் மூலம் ஆஜராகி தெரிவிக்கும் சாட்சியத்தை இந்நீதிமன்றம் பதிவுசெய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் சென்னை பெருநகர் தேனாம்பேட்டை காவல்நிலைய உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு குற்றாலம் காவல்நிலைய காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது குற்றாலம் காவல்நிலையக்குற்ற எண்.319/2014 ச/பி.457, 380 இதச வழக்கு சம்பந்தமாக எதிரியை தேடிவந்தநிலையில் 19.08.2014 ம் தேதி காலை 10 மணிக்கு இலஞ்சி சவுக்குமுக்கு பக்கம் வாகனத்தணிக்கை செய்தபோது TN 45 S 3548 என்ற பதிவெண் கொண்ட மாருதி சுசுகிசென் என்ற நான்குசக்கரவாகனத்தில் வந்த பின்னால் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்துகொண்ட எதிரி பொன்ராஜ் என்ற பொன்னையாவை சாட்சிகள் சண்முகசுந்தரம், ராகவன் ஆகியோர்

முன்னிலையில் கைது செய்து விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலையக்குற்ற எண்.163/2013 ச/பி 457, 380 இதச வழக்கின் சொத்துக்களை திருடியதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்பு பதிவுசெய்தேன். அதன் அடிப்படையில் அன்றைய தினம் 18.00 மணிக்கு அந்த காரில் இருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த சுமார் 4 பவுன் உள்ள சிவப்புக்கல் வெள்ளைமுத்து வைத்திருந்த நெக்லஸ், சுமார் 2-1/2 பவுன் உள்ள வெள்ளைவைலட் கலர் கல் பதித்த நெக்லஸ் ஒன்று, சுமார் 1/2 பவுன் உள்ள கல்தோடு ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்பு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். கைப்பற்றப்பட்ட சொத்துக்களை சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலைய ஆய்வாளருக்கு படிவம் 91ன் மூலம் அனுப்பிவைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். **எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6 ஆகவும், அத்தாட்சி அ.சா.ஆ..7 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ 8 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன.**

**எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவித்தார்.**